RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2432

OPEN ACCESS

# அற இலக்கியம் காட்டும் மகளிர் வாழ்வியல்

எ. சுதாலட்சுமி [அ, *], தே. நேசன் [அ]

[அ] தமிழ்த்துறை, அரசு ஆடவர் கலைக் கல்லூரி, கிருஷ்ணகிரி-635001, தமிழ்நாடு, இந்தியா

# Moral literature shows women's life

E. Sudhalakshmi [a, *], T. Nesan [a]

[a] Department of Tamil, Government Arts College for Women, Krishnagiri-635001, Tamil Nadu, India

* Corresponding Author: sudhalakshmitpt@gmail.com

Received: 13-02-2024
Revised: 27-06-2024
Accepted: 03-07-2024
Published: 16-07-2024

Check for updates

## ABSTRACT

Happiness and pleasures are common to all people and if that happiness is received through chastity, they pave the way to lasting fame and permanent bliss. It is mentioned in the moral literature that common women attract men with the virtues of domesticity, chastity, beauty, art, etc. being able to get along with many people and having unlimited pleasure. A woman is called 'Varaivin Magalir' when she do not stay within limits. All messages attributed 'Varaivin Magalir' apply to men by reference. In Sangam literature these type of women are indicated by the names podumakalir, Kanigai. Parathai and Irumai pendir and so on. Prostitution is highly condemned in the literature of the Sangamaru period, as well as in eighteen anthologies. This article explains about prostitutes, their importance to materialism and so many things are explained very clearly.

**Keywords:** Moral literature, Chastity, Varaivin Magalir

## முன்னுரை

உலகவாழ்வியல் இன்பம் என்பது யாவர்க்கும் பொதுவாயினும், ஓர் எல்லைக்கு உட்பட்டுக் கற்பு நெறியின்வழி அமையுமாயின் நீடித்த புகழைத்தரும்; நிலையான பேரின்பத்திற்கு வழி வகுக்கத்தக்கதாய் அமையும். இதனை,

"ஒன்றறன் கூறாடை உடுப்பவரே ஆயினும்

ஒன்றினார் வாழ்க்கையே வாழ்க்கை"1 (கலி. 17)

என்கிறது கலித்தொகை. அவ்வாறின்றி இல்லறம்புகாது, கற்பு நெறியைக் காப்பதும் அழகு. புனைவு, கலை முதலியவற்றால் ஆடவரை கவர்ந்து, குல, மத, பருவவேறுபாடுகளின்றித் தம் நலத்தைப் பொருளுக்காகவிற்கும் பொதுமகளிர் வரைவின்மகளிர் என்று அறஇலக்கியங்களில் குறிப்பிடப் பெறுகின்றன. பலரோடும் வரையாது கூடும் தன்மையர் என்பதாலும், வரையிலாத இன்பத்தை எய்தும் தன்மை, ஒருவர் மாட்டும் தங்காதவர் என்பதாலும், வரைவின் மகளிர் என சுட்டப் பெறுகின்றனர். வரைவின் மகளிர்க்குக் கூறப்படும் செய்திகள் யாவும் குறிப்பால் ஆண்பாலருக்கும் உரியது. இதனை,

"வரைவில்லாத மகளிரது இயல்பு"

என்பார் பரிமேலழகர்.

வரைவின் மகளிரைச் சங்கஇலக்கியங்களில் கணிகை, பரத்தை, பொருட்பெண்டிர், பொதுமகளிர், இருமாய் பெண்டிர் எனும் பெயர்களால் சுட்டியுள்ளதை நோக்கமுடிகிறது. பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் என்று சங்கமருவியகால இலக்கியங்களில் பரத்தையை ஒழுக்கம் மிகவும் கண்டிக்கப்பட்டுள்ளது.

இவ்விலக்கியங்களில் பரத்தையர் என்பவர்கள் பொருளாயுடையோர், அவரை நாடுதல் கூடாது போன்ற பலகருத்துகள் இடம்பெற்றுள்ளதை வெளிக்கொணரும் நோக்கமாக இக்கட்டுரை அமைகிறது.

## அன்பில்லாப் பெண்டிர் இன்சொல்லும் இழுக்கு

ஆடவரை உள்ளுற அன்பினால் விரும்பாதவராய், பொருள்களையே விரும்பிச் செல்லும் தன்மையர் வரைவின் மகளிர் அன்பு காரணமாக ஆசைகொள்ளாமல், பொருள்காரணமாக மட்டும் ஆசைக்கொள்ளும் மகளிருடையசொல் இனிமையானதாக இருந்தாலும், பின்னர் துன்பத்திற்குக் காரணமாக அமைந்து இழுக்கத்தையே தரும். ஆதலால்,

“அன்பின்விழையார்பொருள்விழையும்ஆய்தொடியார்

இன்சொல்இழுக்குத்தரும்”2 (குறள் - 911)

என்று வள்ளுவர் கூறுகிறார்.

விலைமகளிர் தனக்குக் கிடைக்கக்கூடிய பொருளுக்கு ஏற்ப இனிமையாகப் பேசக்கூடிய திறன் கொண்டவர்கள், அவர்களின் குணம் அறிந்து அவர்களைச் சேராமல் விலகவேண்டும் என்பதை,

“பயன்தூக்கிப்பண்புரைக்கும்பண்பின்மாட்டு

நயன்தூக்கிநுள்ளாவிடல்”3 (குறள். 912)

எனும் குறள் விளக்குகின்றது. விலைமகளிர் கிடைக்கும் பொருளின் அளவைக் கொண்டே பழகும் இயல்புடையவர்கள் என்று குறிப்பிட்டுள்ளதாக அறியமுடிகிறது.

### பொருள்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்

“கற்பெனப்படுவது கரணமொடுபுணர” வரைந்து வாழ்வது தமிழர்நெறி. அவ்வளின்றிப் பொருளுக்காகத் தம்முடைய பெண்மையை விற்கும் பெண்டிரைப்புணரும் பொய்யானகூடல், இருட்டு அறையில் உணர்ச்சியற்ற பிணத்தைப் பிணமென்று அறியாமல் தழுவிப்புணர்வதற்குச் சமமானதாகும் என்பதை,

“பொருட்பெண்டிர்பொய்ம்மைமுயக்கம்இருட்டறையில்

ஏதில்பிணம்தழீஇயற்று”4 (குறள். 913)

என்ற குறள் சுட்டுகிறது. பொருட்பெண்டிர் பெண்மைகுணம் அற்றவர்கள் என்றும், அவர்களின் உறவானது பிணத்துடன் கொள்ளும் உறவிற்கு நிகராகும் என்றும், வள்ளுவர் பொருட்பெண்டிரை இகழ்ந்துரைக்கிறார்.

உண்மையான அன்பு இல்லாமல் பொருள் ஆசைக்காகச் சேரக்கூடிய மகளிருடைய தோள்களை மனத்தை அடக்கும் திறமை அற்றவர்களே தழுவுவார்கள் என்பதை,

“நிறைநெஞ்சம் இல்லேர் தோய்வர் பிறநெஞ்சின்

பேணிப்புணர் பவர் தோள்”5 (குறள். 917)

என்றகுறள்புலப்படுத்துகிறது.

"பொருட்பொருளார் புன்னலம் தோயார்

அருப்பொருள் ஆயுள் அறிவினார்"6 (குறள். 914)

என்ற குறள், அருட்செல்வமாகிய பேரின்பத்தை நாடும் அறிவுடையவர்கள் பொருட்செல்வத்தை மட்டும் கருதுகின்ற மகளிருடைய அற்ப அகத்தை மனதாலும் தீண்டமாட்டார்கள் என குறிப்பிடுகிறது.

பொதுமகளிர் பற்றித் திருக்குறளில் இடம்பெற்றுள்ள கருத்துகள் யாவும், அவள் பொருளாசையுடையவள், எனவே அவளைக் கூடுதல் சரியன்று என்று கடித்துரைக்கும் நோக்கில் அமைந்துள்ளதை அறியமுடிகிறது.

## நாலடியாரில் பொதுமகளிர்

சமணமுனிவர்களால் இயற்றப்பெற்ற நாலடியார் பொருட்பாலில் பொதுமகளிர் பற்றிக் குறிப்பிடுகின்றது. திருக்குறளைப் போலவே நாலடியாரும் பொதுமகளிர் பொருள் ஆசைக்கொண்டவர் எனக் கூறுகிறது.

புதுநீர்ப்பெருக்கத்தையும் அழகியதோடணிந்த வேசையரின் தொடர்பும் ஆராய்ந்தால் அவை தம்தன்மையில்வேறுவேறுஅல்ல. புதுப்புனல் மழை நிற்க நின்றுவிடும், விலைமகளிர் காட்டும் அன்பும், பொருள்வருவாய் நீங்க நின்று விடும் என்பதை,

"புதுப்புனலும்பூங்குழையார்நட்பும்இரண்டும்

விதுப்புறநாடின்வேறல்ல, புதுப்புனலும்

மாரிஅறவேஅறுமேஅவரன்பும்

வாரிஅறவேஅறும்"7 (நாலடி. 375)

எனும் பாடல் உணர்த்துகிறது.

இப்பாடலில் புதுப்புனலாடுதலோடு வேசையின் குணம் ஒப்பிட்டுக் கூறப்பட்டுள்ளது. பூங்குழையார் என்பது வேசையரின் அழகை வருணிப்பதாக அமைந்துள்ளது. பொதுமகளிரது இயல்பு பொருள் பெறுவதுமட்டும் தான் என்பதை அறியமுடிகிறது.

## திரிகடுகத்தில் பொதுமகளிர்

திரிகடுகம் பொதுமகளிர் பொருள்மீது விருப்பம் கொண்டவர் எனும் கருத்தைப்பதிவு செய்கிறது.

"மனம் பிறிதாய்க்

காரியத்திற்கு குன்றாக் கணிகையும்" 8 (திரி. 76)

எனும் அடிகள் மூலம், பொது மகளிரின் மனம் வேறொன்றின் மேல் சென்றும், பொருள் வருவாயினை மேற்கொள்ளும் மகளிரை கடிதல் வேண்டும் என்பதை புலப்படுத்துகிறது.

## சிறு பஞ்ச மூலத்தில் பொது மகளிர்

சிறுபஞ்சமூலம், உயர்வில்லாத அணிகலன்களை அணிந்த பொருட்பெண்டிர் இருக்கும் தெருவில் பொருளில்லாமல் காதலுடன் திரிபவள், பருத்திவிற்கும் இடத்தில் நிற்கும் நாய்க்கு ஒப்பானவள் என்பதை,

"ஏனில்

பொருந்திய பூண்முலையார் சேரிக்கைத் திரிவான்

பருத்தி பகர்வழி நாம்"9 (சிறுபஞ். 87)

என்ற அடிகள் மூலம் புலப்படுகின்றது.

## பார்க்கத் தகாதவள்

ஆசாரக்கோவை, தம் கண்ணின் ஒளிகெடாமல் இருக்க விரும்புகின்றவர்கள் மின்னலின் ஒளியையும், எரிநட்சத்திரத்தின் ஒளியையும் வேசியரது ஒப்பனையையும், பகலுக்குரிய சூரியனது காலை ஒளியையும், மாலைஒளியையும் உற்றுப்பார்க்க மாட்டார்கள் என்று குறிப்பிடுகின்றது. இதனை,

"மின்னொளியும் வீழ்மீனும் வேசையர்கள் கோலமுந்

தம்மொளி வேண்டுவார் நோக்கார் பகற்குழலோன்

முன்னொளியும் பின்"10 (ஆசாரக். 51)

என்ற அடிகள் மூலம் உணர்த்துகின்றன.

## முடிவுரை

மக்களின் பண்பாட்டையும், நாகரிகத்தையும் வெளிப்படுத்தும் இலக்கியங்கள், மகளிரின் வாழ்வியல் செய்திகளையும் எடுத்து கூறும் வல்லமை பெற்றவை. அவ்வகையில் பதினெண் கீழ்க்கணக்கு அறநூல்களில் பொதுமகளிர் என்பவர்கள் பொருளாசை உடையவர்கள், அவர்கள் அன்பற்றவர்கள், அவரின் தொடர்பு அற்பசுகத்தைத் தரக்கூடியது எனும் கருத்து பதிவுசெய்யப் பெற்றுள்ளது. மேலும், அவரின் மனதை அறிதல் கடினம், அவரோடு கொள்ளும் உறவு பிணத்துடன் கொள்ளும் உறவுக்குச் சமமானது. பொருளுக்கு ஏற்ப இனிமையாகப் பேசக்கூடியவர்கள், பொருள் உள்ளபோது அன்புடையவராகவும், பொருள் அற்றபோது அன்பு அற்றவர்களாகவும் இருப்பவர்கள் என்று பொதுமகளிர் பற்றிய செய்திகள் பதிவு செய்யப்பெற்றுள்ளன.

## References


தி.சு.பாலசுந்தரம், ஆசாரக்கோவை, கழகவெளியீடு, சென்னை

தி.சு.பாலசுந்தரம்பிள்ளை, நாலடியார், கழகவெளியீடு, சென்னை

பரிமேலழகர், திருக்குறள் உரை, கழகவெளியீடு, சென்னை

பாலசுந்தரம், சிறுபஞ்சமூலம், கழகவெளியீடு, சென்னை

பு.சி.புன்னையவன், திரிகடுகம், கழகவெளியீடு, சென்னை

புலியூர்க்கேசிகன், கலித்தொகை, பாவைபப்ளிகேசன், சென்னை



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2024. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License